# ஈழத்தில் வைஷ்ணவப் படிமக்கலைப் பாரம்பரியம் காட்டும் விக்கிரஹவியல் பண்பாட்டுச் சிறப்பியல்புகள் – ஓர் ஆய்வு

செ.கிருஷ்ணராஜா

### ஆய்வுச்சுருக்கம்

*இந்துக் கடவுளர் தொகுதியானது விஷ்ணு, சிவன், சக்தி, சூரியன் மற்றும் கணேசர் என ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 'பஞ்சதேவசபை' என அழைக்கப்படுவதனைக் காணலாம். இந்துக் கடவுளரது உருவங்களைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பானர்ஜி, பட்டாச்சார்ஜி ஆகியோரும் இப்பிரிவுகளைப் பின்பற்றியுள்ளனர். இலங்கையில் கிடைத்த இந்துக் கடவுளர்களது சிறப்பம்சங்களைப் பகுத்தாய்வு செய்யும்போதும் இப்பிரிவு முறைகளைப் பின்பற்றுவது மிகவும் பொருத்தமாகப்படுகின்றது. இந்த ஒவ்வொரு பகுதியையும் ஆரம்பமாகக் கொண்டு அவற்றோடு தொடர்பான ஏனைய உப தெய்வ சிற்பங்களையும் பற்றி ஆராய்ந்து கொள்ள முடியும். அதாவது விஷ்ணு படிமத்துடன் தொடர்பான கருட, மற்றும் அனுமான் உருவங்களைப் பற்றியும், சிவனது வணக்க முறைகளுடன் தொடர்புள்ள மற்றைய கடவுளர்களதும், சிவனடியார்களதும் சிற்ப உருவங்களைப் பற்றியும் நோக்க முடியும். ஆனால் இவ்வாய்வுக் கட்டுரையின் கண் விஷ்ணுவினை முதன்மையாகக் கொண்டுள்ள வைஷ்ணவப் படிமக்கலை மரபு பற்றியே ஆராயப்படுவது முதன்மையான நோக்கமாகவுள்ளது.*

### அறிமுகம்

"இதிகாசங்கள்" எனச் சிறப்பிக்கப்படும் இராமாயணம், மகாபாரதம் ஆகிய காவியங்களின் மூலகர்த்தாவாகச் சிருஷ்டிக்கப்பட்ட விஷ்ணுவினது அவதார நிலைகளை அடிப்படையாகக் கொண்டே தென்னாசிய வைஷ்ணவப் படிமக்கலைப் பாரம்பரியம் முகிழ்த்தெழுந்தது.[1] தென்னாசியப் பண்பாட்டின் தொன்மம்மிக்க கூறுகளை 'இதிகாசங்கள்' கொண்டிருந்த வகையில் வைஷ்ணவத்தின் தோற்றமும், வளர்ச்சியும், செல்வாக்கும் இப்பிராந்தியத்தின் ஓவியக்கலை மற்றும் படிமக்கலை வரலாற்றில் காலந்தோறும் இணைக்கப்பட்டு வந்திருந்தமையை சிற்ப, மற்றும் தொல்லியல் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. தென்னாசியாவில் வளர்க்கப்பட்டிருந்த அரசியல், சமுதாய, பண்பாட்டு நிறுவனங்களில் அதீத செல்வாக்குடன் விளங்கிய வைஷ்ணவப் பாரம்பரியம் பின்னர் (கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குப் பின்னர்) மகாயான பௌத்த மதத்துடன் இணைக்கப்பட்ட வகையில், தென், தென்கிழக்காசிய நாடுகளிலும் வேரூன்றி, அவ்வப்பிராந்தியங்களின் தனித்துவமான பண்பாட்டுருவாக்கத்திற்குரிய பிரதான கலை வலுவுள்ள ஓர் அடிப்படையை வழங்கியது[2] அவ்வழியே இலங்கைத் தீவின் ஐதீகம், மரபு மற்றும் கலை வாழ்வியக்கங்களில் வைஷ்ணவப் பண்பாட்டுக் கோலங்கள் பிரதானமான ஓரிடத்தினை வகித்திருக்க முடிந்தது.

நீரையும், நிலத்தையும் தனது தத்துவார்த்தப் புலத்திற்குள் மிகவும் இறுக்கமாக அரவணைத்துக் கொண்ட நிலையில், கலை வெளிப்பாடுகளை வைஷ்ணவ மதம் ஆக்கிக்

கொண்டிருந்த வகையை தென்னாசிய சிற்பத்தொகுதிகள் வெளிப்படுத்துகின்றன.[1] அவ்வாறான கலை வெளிப்பாட்டின் தன்மை களிலிருந்து பிராந்தியத் தனித்துவம், மொழிக் கூறுகள், இனவடிப்படை போன்றவற்றை இவ் வைஷ்ணவப் பாரம்பரியம் இனங்காட்டியுள்ள வகையைக் கூட அவதானிக்க முடிகிறது. இஸ்லாத்துடன் இணைந்த வகையிலும் வைஷ் ணவமானது மிகவும் தனித்துவமானதொரு பண்பாட்டு இணைப்பினை ஏற்படுத்தியிருந் தமையை மறுக்க முடியாது. மொஹலாயப் பேரரசு காலத்து 'கண்ணன்–ராதா' Cult மேற்குல கினையும் கிழக்குலகினையும் இணைத்த ஒரு கலையூடகமாகத் திகழ்ந்தது என்றால் அது மிகையாகாது.[3] இதேபோன்று மகாயானக் கோட்டுபாடுகள் சிலவற்றுடனும் வைணவ மரபுகள் சிலவற்றை இணைத்து வைத்துள்ள வகையில்கூட குறிப்பாகப் பெரியாழ்வார்கள் ஊடான கருட அல்லது அன்னப் பட்சி வடிவம் கொண்டு பறத்தல் பற்றிய ஓவியங்கள் மரபூடகங்கள் பௌத்த வைஷ்ணவ கலைகளின் சங்கமிப் பினை வெளிப்படுத்தியுள்ளன[4]. அவ்வகையில் இலங்கைத் தீவிலும் காவல் நிலைக்குரிய பாதுகாப்புத் தெய்வமாக உபுல் வணன் எனப்பட்ட நீலநிற மேனியையுடைய விஷ்ணு கருதப்பட்டதற்கான இலக்கிய ஆதாரங் கள் உள.[5] ஈழத்துப் பௌத்த விகாரங்களிலுள்ள சுவர் ஓவியங்களிலும், சிற்பப் படிமங்களிலும் விஷ்ணுவின் அவதாரக் கோட்பாடுகள் இணைக்கப்பட்டுக் காணப்படுவதோடு, ஈழத்து இந்துமதப் பாரம்பரியத்திலும் வளர்ச்சி பெற்ற படிமக்கலை வரலாற்றிலும் விஷ்ணுவின் அவதார வடிவங்கள் வெளிப்படுத்தப்பட்டமை யினைக் காணலாம். எனவே, ஈழத்தில் வைஷ்ண வப் படிமக்கலைப் பாரம்பரியம் காட்டும் சிறப்பியல்புகள் என்ற இவ்வாய்வுக் கட்டுரையில் வெண்கல உலோகத்தாலானதும் கல்லினால் செய்யப்பட்டமையுமான விஷ்ணுவினதும், அவ்வழிபாட்டு மரபுடன் தொடர்புபட்ட ஏனைய படிமங்களைப் பற்றியுமான சிறப்பியல்புகளே ஆராயப்படுகின்றன.

**இலங்கையில் விஷ்ணுவின் படிமங்கள் கிடைத்த மையங்கள்**

இலங்கையில் கிடைத்த இலக்கிய, புராண மரபுகளுக்கப்பால் தொல்லியல், சாசனவியல் சான்றாதாரங்களினூடாக ஈழத்து வைஷ்ணவக் கலைப் பாரம்பரியம் பற்றி அறிய முடிகிறது.[2] வடக்கே கந்தரோடையிலிருந்து தெற்கே தொந்திராமுனை வரைக்கும், கிழக்கே மண்டூரிலிருந்து மேற்கே சிலாபத்திலுள்ள விஷ்ணு கோவில் வரைக்கும் வைஷ்ணவப் பண்பாட்டு மரபிற்குரிய கலாசார எச்சங்கள் விரவிக் காணப்படுகின்றன. கந்தரோடையி லிருந்து தந்தத்தாலான மிகச்சிறிய விஷ்ணு வின் படிமம் ஒன்று, வெண்கல வட்டகைக் குள்ளாக்கப்பட்ட ஹனுமான் படிமம் ஒன்று தவழும் நிலையிலுள்ள பாலகிருஷ்ணன் படிமம் ஒன்றுமாக மூன்று சிற்பப் படிமங்கள் கிடைத் துள்ளன. புத்தூரில் நிலாவரைக்கண்மை மிலுள்ள ஓரிடத்திலிருந்து விஷ்ணுவினது நின்ற நிலைக்குரிய கற்சிற்பம் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. கிளிநொச்சியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சந்தண வேணுகோபால் கற்சிற்பம் ஒன்று அண்மையில் கிடைத்த மற்றுமொரு சான்றாகும்.[6]

அனுராதபுரத்திலிருந்தும், பொலநறுவை யிலிருந்தும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விஷ்ணு படிமங்கள் கிடைத்துள்ளன. இவ்விரு மையங்களிலிருந்தும் உலோகத்தாலான

பாலகிருஷ்ணர் வடிவங்கள் உட்பட தனித்துவம் வாய்ந்த விஷ்ணுவின் சிலைகள் கிடைத் துள்ளன. ஈழத்துப் பாலகிருஷ்ணர் உலோகச் சிற்பக்கலை மரபானது மகாயான பௌத்தமதப் பிரிவுடன் இணையாத நிலையில், தனித்துவ மாக, இந்துமதப் பிரிவினைச் சார்ந்து, இலங் கையில் வைணவம் பெற்ற வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

திருகோணமலை மாவட்டத்திலிருந்தே அதிக எண்ணிக்கையிலான விஷ்ணுவின் கற்சிற்பங்கள் கிடைத்துள்ளன. கந்தளாயான சதுர்வேதி மங்கலம், பார்வதிபுரமான பதவியா ஆகிய பிரதேசங்களிலிருந்தே விஷ்ணுவின் சிற்பங்கள் கிடைத்துள்ளன. ஈழத்தினைச் சோழ மன்னர்கள் ஆட்சி செய்தபோது கந்தளாய், பதவியா, தம்பலகாமம் ஆகிய ஒரு முக்கோணப் பரப்பு வைணவப் பண்பாட்டுப் பகைப் புலமாக அமைந்திருந்தமையை சான்றுகளின் ஊடாகக் காணமுடிகின்றது. பொலநறுவையில் ஐந்து வைணவ ஆலயங்கள் அகழ்வாய்வின் போது அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை சோழராட்சிக் காலத்திற்கும், அதற்குப் பிற்பட்ட வைபாகவுமே உள்ளன. ஆனால் தென்னி லங்கையிலுள்ள தொந்திரா முனையில் உள்ள உபுல்வன் கோயில் பல்லவர் காலத்திற்குரிய ஒன்றாகக் காணப்படுவது இங்கு குறிப்பிடத் தக்கது.

மேற்கூறப்பட்ட பிரதேசங்களிலிருந்து அகழ்வின்போதும், தற்செயல் நிகழ்வுகளின் போதும் பெற்றுக்கொள்ளப்பட்ட விஷ்ணுவின் சிலைகள், வெண்கலப் படிமங்கள் யாவும் அநுராதபுரம், கொழும்பு தேசிய அரும் பொருள கங்களில் வைத்துப் பாதுகாக்கப்படுவதனைக் காணலாம். கொழும்பு தேசிய அருங்காட்சிய சுத்தில் பேணிப்பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள கல்லினாலான விஷ்ணுவின் சிற்பங்கள் குறிப்பிடத்தக்க கலையம்சங்களைக் கொண்டி ருந்தபோதும் அவற்றுள் பல உடைந்து சிதைந்து, முழுமையாக அடையாளம் காணமுடியாத வகை யில் இருப்பதனைக் காணலாம். அதனால் ஈழத்து இந்துசமயச் சிற்பக் கலை வரலாற்றில் அவை வகிக்கும் பங்கினை முழுமையாக எடுத்தாராய முடியாமையுள்ளமையும் நோக்கத் தக்கது. அண்மைக் காலங்களாக கிழக்கிலங் கையின் பிரதான நகரங்களினூடான நீர்ப் பாசனக் கால்வாய் அபிவிருத்திப் பணிகள் மேற் கொண்ட சமயம் விஷ்ணுவின் பல சிற்பங்கள் தற்செயலாகக் கிடைத்திருந்தும் அவையாவும் பௌத்த குருமாரால் பன்சாலைகளுக்குள் வைத்துப் பாதுகாக்கப்பட்டதனால், அவற்றின தும் கலைத்துவமான அம்சங்களை வெளிக் கொணர முடியாது நேர்ந்துவிட்டது.[7] எவ்வா றாயினும், இதுவரையில் கிடைக்கப் பெற்று, அரும்பொருளகங்களில் வைத்துப் பாதுகாக்கப் படுகின்ற விஷ்ணுவினது படிமங்களை பின்வருமாறு வகைப்படுத்தி எமது ஆய்வினை முன்னெடுத்துச் செல்ல முடியும். அப்பிரிவு களாவன பின்வருமாறு.[8]

1. விஷ்ணு படிமம்
2. இராமர் படிமம்
3. பாலகிருஷ்ணர் படிமம்
4. கருடன் படிமம்
5. அனுமான் படிமம் என்பனவாகும்.

**விஷ்ணு படிமம்**

நின்று கொண்டிருக்கின்ற, ஆசனத்தி லிருக்கின்ற, சயனித்திருக்கின்ற பகுதிகள் என மூன்றாக விஷ்ணுவின் விக்கிரஹவியல் பிரிக்கப்பட்டிருப்பினும், இலங்கையில் கண் டெடுக்கப்பட்ட விஷ்ணுவின் சிற்ப உருவங்கள்

எல்லாம் நின்று கொண்டிருக்கும் வகையைச் சேர்ந்தவையாகும். இச் சிற்பங் களிற் கூடிய தொகையானவை கருங்கற்களாற் செய்யப்பட்டவையாகக் காணப்படுவதுடன் உலோகத்தாற் செய்யப்பட்டவையும், சுண்ணக் கற்களால் செய்யப் பட்டவையும் என அவை காணப் படுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில், கந்தளாயிலுள்ள பொத்தன்காடு எனப்படும் இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட கருங்கல்லினால் செய்யப்பட்ட விஷ்ணு சிற்பம் தற்சமயம் கொழும்பு தேசிய அரும்பொருட் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது.[9] (இல 24.57.22.7) 100cm உயரமுள்ளதான இக்கற்சிற்பம் மூன்றாக உடைந்த நிலையில் மீண்டும் பொருத்தப்பட்டுள்ளன. ஆயினும், சிரத்தில் கிரீடத்தைக் காட்டும் பகுதி உடைந்து போயுள்ளது. இவ்வுருவத்தில் விஷ்ணு கடவுள் சமநிலையிற், சூரிய ஒளியில், தாமரையாசனத்தின் மீது நின்று கொண்டிருப்பதாகக் காணப் படுகிறது. உருவத்தின் நான்கு கைகளிலும் இலச்சினைகள் காணப்படுகின்றன. வலது கைகளில் சங்கும், தாமரைப் பூவும், இடது கைகளில் சக்கராயுதமும், கதாயுதமும் காணப் படுகின்றன. சிற்பத்தின் நுண்மையான அம்சங்கள் சிதைந்துள்ளதுடன் மேனியில் மாலையும், இடைக்கச்சும், பூணூலும் (யக்னோபவீதம்) காணப்படுகின்றன. கீழாடை தார்ப்பாச்சாக உள்ளது. இடுப்பில் பிரமக் கிரந்திமுள்ளது. இருபக்கங்களிலும் காணப்படும் கச்சுகள் பரவிச் செல்வதாகக் காட்டப்பட்டுள்ளது. சிற்பத்தின் நெற்றி ஒடுக்கமானது. முகம் சதுர வடிவமானது, கழுத்து குட்டையானது, தோள்கள் அகலத்திற் குறைந்தவை. சக்கராயுதமும், சங்கும் நெருப்புச் சுவாலையுடனும், சக்கராயுதத்தின் கூர்ப்பக்கம் கடவுளின் முகப்பக்கமாகப் பொருந்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் கி.பி. 10–13 ஆம் நூற்றாண்டிற்கிடைப்பட்ட காலத்தை உடைய தான சிற்பச் சிறப்புகளை அக்கற்சிற்பம் கொண்டதாகக் கணிக்கப்படுகின்றது.[10] இச்சிற்பம் விஜயபாகு அரசனுக்கும், நிசங்கமல்ல அரசனுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகவிருக்கக் கூடுமென்பது பரண விதான அவர்களின் கருத்தாகும்."

பொலநறுவை விஷ்ணு தேவாலயத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட[12] மற்றுமொரு கல்லாலான விஷ்ணு உருவம் கொழும்பு தேசிய அரும்பொருளகத்தில் (இல 24:57.31.7) காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. 112 cm உயரமான இவ்வுருவத்தின் கைகள் நான்கில் மூன்று மட்டும் சின்னமுடன் காணப்படுகின்றன. வலது கையொன்றில் சக்கராயுதமும், இடதுகைகளிரண்டில் சங்கும், கதாயுதமும் காணப்படுகிறன. மற்ற வலது கை அபய முத்திரையைக் கொண்டதாகும். சிற்பத்தின் சிரத்தில் மகுடம் காணப்படுகின்றது. கழுத்தில் அலங்காரமான மாலை ஒன்று உள்ளது. யக்னோபவீதமும் இடைக்கச்சும் சிறிது சிதைந்து போய்க் காணப்படுகின்றது.

கைகளிலும் புயங்களிலும் ஆபரணங்கள் காணப்படுகின்றன. அணிந்திருக்கும் தார்ப்பாச்சின்மீது கட்டியிருக்கும் மேகலை என்னும் ஆபரணமும் சிங்கமுக வடிவானதாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. முன்பு இங்கு விபரிக்கப்பட்ட விஷ்ணு உருவத்தில் இருப்பது போன்று கடவுளர் சமநிலையில் சூரிய ஒளியில்

நின்று கொண்டிருப்பினும் பத்மாசனத்தைக் காணவில்லை. இந்த விஷ்ணு உருவம் இலங்கையில் கிடைத்த அனைத்து விஷ்ணு விக்கிரகங்களிலும் பார்க்கப் பாதுகாப்பாக விருந்துள்ளது. உருவத்தின் இருதோள்களும் அகலமானவை. மேனி ஓரளவு மெல்லியதாகவும் உள்ளது. கலை அம்சமுள்ளதான இது சோழர் காலத்தைச் சேர்ந்த படைப்பு எனக் கணிப்பிட முடியும். பொலநறுவையிலேயே கண்டெடுத்த சிற்பமாகவிருப்பினும், ஆபரணங்களையொட்டிப் பார்க்கும் போது இது கி.பி.10ஆம் 11ஆம் நூற்றாண்டிற்கு அண்மித்ததாகக் கணிக்க முடியும்.

கொழும்பு தேசிய அரும்பொருளகத்தில் (இல 24:57:47:10) காணப்படும் சிற்பம் கைகளில் மூன்று இலட்சினைகளைக் கொண்ட விஷ்ணு உருவமாகும். இது கண்டெடுக்கப்பட்ட இடம் குறிப்பிடப்படவில்லை. உருவத்தின் உயரம் 115cm ஆகக் காணப்படுகின்றது. சமநிலையிற் சூரிய ஒளியில் நின்றுகொண்டிருப்பதாகச் செதுக்கப்பட்டிருக்கும் இவ்வுருவத்தின் சிரத்தில் உயரமானதொரு மௌலி காணப்படுகின்றது. கீழே தொங்கவிடப்பட்ட வலது கரம் முழங்கையிற்குக்கிட்ட உடைந்துபோய்க் காணப்படுகின்றது. ஆயினும் அது கதாயுதத்தின் எஞ்சிய பகுதிகளிலிருந்தும் தெளிவாகின்றது. மேலே வலது கையில் சங்கு இருக்கின்றது. மேலே இடது கையில் சக்கராயுதமும் உள்ளது.” மற்றைய இடக்கை கீழே தொங்கவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அனேக உருவங்களில் இடதுகை கீழே தொங்கவிடப்பட்ட நிலையில் காணப்படவும், இந்த இடது கையைத் தொடைமீது வைத்துக் கொண்டிருப்பதாகக் காணப்படுகின்றது. ஆயினும் இவ்வுருவத்தில் அவ்வாறு காட்டப்பட்டு இருக்கவில்லை. "காசியப்ப சிற்பம்" என்னும் நூலில் கீழே தொங்கவிடப்பட்ட இடது கையில் வராக முத்திரை காட்டப்பட வேண்டுமென உளது. செவிகள் குண்டலாபரணத்தை அணிந்து காணப்படுகின்றன. கழுத்தில் கண்டமாலை தெரிகின்றது. இடுப்பில் மேகலை எனப்படும் ஆபரணம் அதிக அகலமுடையதாகக் காணப்படுகின்றது. உதரபந்தம் எனப்படும் இடைக்கச்சும் மற்றைய விஷ்ணு உருவங்களில் இருப்பவை போன்றதல்லாமல் வித்தியாசமாகவும் இருக்கின்றது. அதன் கழுத்தில் முத்துப் பட்டினாலான மாலையின் இருபட்டு கீழே தொங்கிக் கொண்டிருக்கின்றது. உபவீதம் இடைக்கச்சின் அண்மையில் இரண்டாகப் பிரிந்து, அதிலொன்று வயிற்றுக்கு நேராகவும், மற்றையது இடுப்பிற்கு கீழாகவும் போவது போன்றும் சரீரத்தின் வலது பாகத்தில் பிற்புறமாகவும் பொருந்தியுள்ளது. கீழாகவுள்ள தார்ப்பாச்சு மற்றையரூபங்களில் போன்றதல்லாமல் புதிய மாறுபட்ட விதத்தில் காணப்படுகின்றது. ஆடை ஆபரணாதிகளின் விசேடத் தன்மையும் சங்கினதும், சக்கராயுதத்தினதும் நடுவாக ஆரம்பித்து கீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும் அலங்காரமும், விஷ்ணு ரூபத்தின் சிரத்தின் இருபக்கத்திலும் காட்டியுள்ள காந்தர்வ ரூபமும் இந்தச் சிலையானது இலங்கை, தென்னிந்தியாவினதும் சிற்பங்களைவிட மாறான வித்தியாசத்தையுடைய சம்பிரதாயபூர்வமான விசேட தன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. உருவத்தின் இருபக்கமும் நின்றுகொண்டிருப்பதாகக் காட்டப்பட்டிருக்கும் அணங்குகளின் உருவங்களால் ஸ்ரீதேவியும், பூதேவியுமாகக் காட்டப்படுவதாகக் கருத முடியும். இச்சிலை கி.பி.8ஆம் 12ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்டதாகவுள்ள சாளுக்கிய சிலைகட்குக் கிட்டிய ஒற்றுமையைக் காட்டுவதாகத் தெரிகின்றது.

பொலநறுவையில் 5ஆம் இலக்கத்தைக் கொண்ட சிவன் கோவிலிலிருந்து " கிடைத்து தற்சமயம் அநுராதபுரம் தொல்பொருட் காட்சிச்சாலையில் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ள 30cm உயரமான உலோகத்தாலான படிமமாக (இல:318) மூன்று கை இலச்சினை களுடன், சமநிலையில், சூரியகிரணத்தில் நின்று கொண்டிருப்பதாக உள்ள ஒரு விஷ்ணு வெண்சிலை எமது கவனத்தை ஈர்க்கின்றது. மேலே வலது கையில் சக்கராயுதமும், இடது கையில் சங்கும் காணப்படுகின்றது. அவை நெருப்புச் சுவாலையுடன் இருப்பதுடன், சக்கராயுதத்தின் முகமும், ஓரமும் சிற்பத்தின் முகப்பக்கமாகப் பொருந்தியுள்ளதைக் காட்டு கின்றது. கீழ் வலதுகை அபயமுத்திரை யுடனுள்ளது. கீழ் இடது கை கதாயுதத்தின் மீது வைத்துக் கொண்டிருக்கும் விதமாக அமைந்துள்ளது. இரு காதுகளிலும் மகரகுண்ட லாபரணம் அலங்கரிக்கின்றது. கழுத்தில் மாலையும், தோளில் உபவீதமும் இடைக்கச்சம் அமைந்துள்ளது. புயம் "கேயூரம்" எனப்படும் ஆபரணத்தாலும் முழங்கை 'வாசிகைக்கட்டு' என்னும் ஆபரணத்தாலும் 'வளையல்'அணிந்த வளைகரத்துடனும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அணிந்திருக்கும் தாரப்பாச்சு உடம்புடன் ஒட்டியதாகத் தெரிகின்றது. மேகலை அல்லது இடையணியின் முன்பக்கத்திலுள்ள 'திருகு சிங்கமும்' மாதிரியாக உள்ள வகைக்கு வித்தியா சமானதே. கடவுளர் நின்று கொண்டிருக்கும் பத்மாசனம் அளவில் பெரியதான பத்திர பீடத்தின்' மீது பொருத்தப்பட்டுள்ளது. பத்திரபீடத்தின் கீழ் இடைவெளியானது தாமரை இதழ் சித்திரமாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. இச்சிறப்பம்சம் சிற்பங்களின் காலத்தைத் தீர்மானிப்பதற்கு முக்கியமானவை எனச் ஸ்ரீநிவாசன் கருதுகிறார்[15]. இலங்கைச் சிற்பங்களில் இந்தத் தாமரை இதழ் அலங்காரம் அனைத்திலும் நடுவாக மையரேகையொன்று தோற்றப்படுத்தியிருப்பதானது ஒரு சிறப்பு அம்சமென சிவராமமூர்த்தி தெரிவித்துள்ளார்[16]. இந்தச் சிற்பத்திலும் அம்மாதிரியான சிறப்பம்சம் நன்றாகத் தெரிகின்றது. கொடும்புரவின் கருத்தின்படி பொலநறுவையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட உலோகச் சிற்பம் கி.பி 993 1070 இற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகும்.[7] ஆயினும் சிற்பத்தில் காட்டப் பட்ட இலச்சினைகளின் படி அது கி.பி. 1070 இற்குப் பின்னர் செய்யப்பட்டதென கருது வதற்கு இடமுண்டு. இந்த உருவத்தின் முகஅமைப்பும் விசேடமாக கவனிக்கப்பட வேண்டுமெனவும், அது தென் இந்தியாவின் சோழ மரபுச் சிற்பங்கட்குச் சற்று வித்தியாச முள்ளதாகவும் தெரிகின்றது. இந்தச் சிற்பம், கி.பி 11ஆம் 13ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாக இருக் கலாம் எனக் கருதப்படுகின்றது.

கைகள் இரண்டினை மட்டும் இலச்சினை யாகக் கொண்ட இன்னொரு சிற்பம் விஷ்ணு உருவமாக அநுராதபுரத்திலுள்ள அரும்பொருள கத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது. (இல:எஸ்;84). ஏறத்தாழ 100cm உயரமுள்ள இச்சிலை அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சமநிலையிற், சூரிய கிரணத்துடன் பத்மா சனத்தின் மீது நின்றுகொண்டிருக்கும் விதமாக அமைக்கப்பட்டிருக்கும் இச்சிற்பம், சற்றுச் சிதைந்துபோயுள்ளது. அதனால் அதன் மேல் இரு கைகளும் காட்டும் ஹஸ்தங்களை அறிவது துர்லபம். வலது கரத்தில் சக்கராயுதமும் இடது கரத்தில் சங்கும் இருந்திருக்கலாமெனக் கருதமுடியும். கீழ் வலதுகை அபயமுத்திரையைக் காண்பிக்கின்றது. கீழ் இடதுகை நாட்டிய ஹஸ்த

முத்திரையுடன் இடுப்புக்குச் சற்று கீழாக வைத்த பிரகாரம் காணப்படுகின்றது. கைகள் நான்கும் இவ்விதம் காணப்படும் உருவம் ஸ்ரீநிவாசன் என்று விசேடமாக அழைக்கப் படும்[6]. விஷ்ணு உருவத்தின் சிரத்தில் உயர்ந்த முடி (கிரீடம்) அமைந்துள்ளது. அதன் சாதாரண தோற்றத்தின்படி பல்லவர் காலத்து விஷ்ணு உருவத்தின் கிரீடம் போன்று காணப்படு கின்றது. இரு செவிகளிலும் மகரகுண்டலா பரணம் உள்ளது. முகமுட்பட மேனியும் ஓரளவு சிதைந்துபோயுள்ளதால் சிற்பவிபரணத்தை அறிவது மிகக்கடினம். அணிந்திருக்கும் தார்ப்பாச்சம் பல்லவர் காலத்துக்கும் கிட்டியதாக அமைந்துள்ளது. ஆடை அணிகளின் தன்மை யும், சிலை அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட தாக இருப்பதாலும், (இக்காரணங்களைக் கொண்டு) அது கி.பி.9ஆம், 10ஆம் நூற்றாண்டு காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகக் கணிக்க முடியும்.

பொலநறுவையில் உள்ள ஐந்தாம் சிவாலயத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட[19] இரண்டு கைகளை மட்டும் இலச்சினையாகக் கொண்ட இன்னுமொரு கற்சிற்பத்தாலான விஷ்ணு உருவம் கொழும்பு தேசிய அரும் பொருளகத்தில் காணப்படுகின்றது. (இல:24:57:50:10) அது 60cm உயரமான கற்பலகையில் (தட்டைக்கல்) செதுக்கப்பட்ட தாகும். சமநிலையில், சூரிய கிரணத்துடன் பத்மாசனத்தின் மீது நின்றுகொண்டிருக்கும் இவ் விஷ்ணு தேவரின் மேற்கரங்களில் சக்கராயுதமும், சங்குமுள்ளது. கீழ் வலது கை அபய முத்திரையையும் கீழ் இடது கை முன்னர் விபரிக்கப்பட்டது போன்று, இடுப்புக்குச் சற்றுக் கீழே வைத்தவண்ணமுள்ளது. முகம் போன்றே ஆபரணாதிகளும் அழிந்து போயுள்ளன. மகுடம் தெளிவில்லாமல் இருப்பதுடன் அதனை இடைப்பட்ட காலத்தினைச் சேர்ந்ததாகக் கருத முடியும்.

சுண்ணக்கல்லாற் செய்யப்பட்ட மிகவும் சிதைந்து போயுள்ள கபந்தமாயுள்ள விஷ்ணு சிற்பம் கொழும்பு தேசிய அரும்பொருளகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. (இல:39.7.109) இச்சிலை பொலநறுவை வடக்கு வாயிற்கிடங் கிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.[20] உருவத்தில் மிகுந்திருக்கும் பகுதி 70cm உயரமானது. வலது காலும், முகவாயும் சிதைந்துள்ளதுடன் சிரத்தின் மறுபகுதியும் அழிந்துள்ளது. இடது கைகளில் முழங்கையிற்குச் சற்று மேலே ஒரு பகுதியும் இரு கால்களில் முழங்கால்களுக்கு கீழ்ப்பகுதியும், உடைந்து போயுள்ளன. உருவம் திரிபங்க நிலையில் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. இது விஷ்ணு உருவம் தான் என அறிந்து கொள்ள முடியாமலிருப்பதற்குக் காரணம் மிகுந்திருக்கும் வலது கையிரண்டும் நிருபண மற்றிருப்பது தான். அதில் ஒரு கையில் சங்கைக் காட்டும் தோற்றமும், மறுகை இடுப்பின் மீது வைத் திருக்கும் தோற்றமுமாகும். வலது காதில் மகர குண்டலாபரணமும் ஒழுங்காகத் தொங்குவதாகக் காட்டப்பட்டுள்ளது. இடுப்பி லிருந்து வலது புறமாக சால்வைத் தொங்கல்கள் மூன்றாகத் தொங்குகின்றன. மேகலாபரணத் துடன் தொங்குகின்ற நான்கு தொங்கல்களும் இணைந்து காணப்படுகின்றன. இம் மாதிரி யான சிறப்பம்சம் உள்ள வேறு சிலைகள் கிடைப்பது துர்லபமாகும். சிலையின் அலங்காரம் அகண்ட கழுத்தணிகளுடன் உள்ளது. இடைக் கச்சம் மிகவும் அலங்காரமானது. உருவத்தின் ஆடை அணிகள் போன்று சூரிய கிரணத்துடன் கூடிய ஒளிவீசும் தன்மையதான கலையம்சமும்

பற்றிக் கணிப்பிடும்போது இது இதுவரை விபரிக்கப்பட்ட சகல விஷ்ணு உருவங்களிலும் பார்க்க உயர்ந்த படைப்பாக உள்ளமையைக் காணலாம். இச்சிற்பம் கி.பி.11ஆம் – 13ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததெனக் கருத முடியும்.

கருங்கல்லாலான சிற்பமாக இருக்கும் சிரம் (தலைப்பாகம்) கொழும்பு அரும்பொருள கத்தில் இந்து சிற்பங்களிடையே உள்ளது. (இல:24:57:51:11) இவ்வுருவம் முகவாய்க்கு மேல் உள்ள பகுதி மட்டுமே காணப்படுகின்றது. அதன் வலது காதில் பெரும்பகுதியும் இடது காதின் பகுதியுமாக உடைந்துள்ளது. அதில் காதணி களைப் பற்றி கருதுவதற்கு முடியாதுள்ளது. தலையணிகளும், கண்கள், மூக்கு, இரு உதடுகள் ஆகிய முகத்திலுள்ள அங்கங்களும் மிகவும் பாதுகாப்பாக உள்ளன. முடியினுடைய அமைப்பின்படி இந்தச் சிலையினுடைய தலை விஷ்ணுதலை ஒன்றின் பகுதி என உறுதியாக சொல்ல முடியும். இந்த முடி மிகவும் அலங்கார மாக உள்ளது. அதன் மேற்பகுதி அதே முகமாக இருக்கும் தாமரை இதழ்களாகவும் அலங்காரப் படுத்தப் பட்டிருக்கின்றது. இதற்கு முன்னர் விபரிக்கப்பட்ட கொழும்பு அரும் பொருளகத்தி லிருக்கும் (இலக்கம் 24:57:317) விஷ்ணு சிலையின் தலையும், இந்தச் சிலையினது தலையும் ஒரேவிதமாகக் காணப்படுகின்றது. கண் புருவங்கள், மூக்கு ஆகிய அங்கங்களுடன் முகத்தின் தோற்றமும், முடியினது அலங்காரப் பாணியும் இந்தச் சிலையினது தலை சோழர் கலைப்பாணியைச் சேர்ந்தது என்பதனை கோடிட்டுக் காட்டுகின்றன. அதன் பிரகாரம் இது கி.பி.10ஆம் – 12ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது என கருத முடியும்.

**இராமர் படிமங்கள்**

கந்தளாயிலிருந்து கிடைத்து இப்போது அனுராதபுரம் அரும்பொருளகத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும். 75cm உயரமான உலோகத்தாலான சிற்பமொன்று "துவிபங்க நிலையில்" சூரிய கிரணத்துடன் நின்று கொண்டிருக்கும் ஒரு வடிவமாகக் காணப்படு கின்றது. இச்சிற்பத்தில் இருப்பது கையிரண்டு மட்டுமே. தலையிலிருக்கும் மகுடமும், கழுத்திலிருக்கும் ஆபரணங்களும் மிகவும் அலங்காரமாகக் காட்சியளிக்கின்றன. புயங் களில் அணிந்திருக்கும்"கேயூரம்" எனப்படும் ஆபரணமும், இடைக்கச்சும் மலர்களின் அலங்காரமாக உள்ளது. உபவீதமும் மற்றைய அனைத்து அலங்காரங்களும் மெல்லியதான முறையில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. கீழாடை இருகால்கள் வரைக்கும் நீளமானவை. இடுப்புப்பட்டி சிங்கமுக வடிவமுடையதாக உள்ளது. வலது கை இடுப்பு மட்டத்திற்குக் கீழே தொங்க விடப்பட்ட மாதிரியும், இடக்கை முகமட்டத்திற்கு தூக்கிக்கொண்டும் இருக்கிற மாதிரியும் இச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரு கைகளும் "ஹட ககஸ்தம்" முத்திரையுடன் காணப்படுகின்றன. அதனால் இந்தச் சிற்பம் வில்லினையும் அம்பினையும் இரு கைகளிலும் வைத்திருக்கின்ற ஒருவரைக் காட்டுகின்ற தாகும். இந்தச் சிலைகளிடையே தனித்துவமான வகையில் மூவரது உருவங்கள் இதில் நிரூபண மாகின்றது. வில்லாளியாக பிரசித்தி பெற்ற அருச்சுனன், இராவணனை வென்று உலகப் பிரசித்தி பெற்ற விஷ்ணுவுடைய அவதாரமான இராமன், அவனுடைய சகோதரனான இலக்கு மணன் ஆகிய இம் மூவருமே அத்தனித்துவ மான வகையில் நினைவூட்டப்படுகின்றனர். அருச்சுனனைக் குறித்த சிற்பம் உபவீதம் அணியாமலும், காதுகளில் "பத்திர குண்டலம்"

அணிந்திருப்பதிலுமிருந்தே இராமனை அடையாளம் காண முடியும்[21].

ஆனாலும், இராமருடைய உருவங்களால் இலக்குமணனுடைய உருவத்தை வேறுபடுத்திக் காண்பதற்கு விசேட அடையாளம் எதுவும் இல்லை. இருவருடைய உருவமும் ஒன்றாக இருக்கும் அதேவேளையில் இராமருடைய உருவத்திலும் பார்க்க சற்றுச் சிறியதாக இலக்குமணனுடைய உருவம் இருப்பது சம்பிரதாயபூர்வமானது. தென் இந்தியாவிலே தஞ்சாவூர் மாவட்டத்தில் [22]. வடக்குப் பனையூர் என்னுமிடத்திலேயும்[23]. திருக்குடையூர் என்னும் இடத்திலேயும் கண்டெடுக்கப்பட்ட இராமர் குழுவினரது உருவங்களில் இது நன்றாகத் தெளிவாகின்றது. எது எப்படியாயினும் இந்த உருவத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இவற்றைப் போன்று வேறு சிற்பங்கள் இதுவரையில் கிடைக்காதபடியால் தற்போதைக்கு அதை இராமருடைய உருவமெனக் கருதுவது நியாயமே. இந்த உருவம் கி.பி.11ஆம் – 13ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒன்றாக கருதமுடியும்.

**பாலகிருஷ்ணர் படிமங்கள்**

பொலநறுவை 5ஆம் இலக்கச் சிவாலயத்திலிருந்து[24] கண்டெடுக்கப்பட்டு தற்போது அநுராதபுரம் அரும்பொருளகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் (இல:594) 15:5cm உயரமான சிறிய உலோகத்தாலான உருவமொன்று வலது காலை உயர்த்தி ஆட்டிக் கொண்டிருக்கின்ற குழந்தை யொன்றைக் காண்பிக்கின்றது. "கேசபந்தம்" எனப்படும் ஆபரணமும், மார்பிலே ’சவடி" எனப்படும் ஆபரணமும் காணப்படுகின்றது. அதற்குக் கீழே சிறிது தொங்குகின்ற பகுதிகள் நான்கு இரு கால்களிலும் அமைதந்திருக்கின்றது. இருகால்களிலும் பாதசாரமும், சிலம்புகளும் காணப்படுகின்றன. இந்த ஆபரணங்களனைத்தும் மிகத் தெளிவாகத் தெரிகின்ற விதத்தில் சிலையமைப்பு இருப்பது விசேடமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று. இந்த உருவம் பாலகிருஷ்ணராக நிரூபணமாகின்ற தென கொடக்கும்பரே கருதியிருக்கின்றார்.[25] கிருஷ்ணர் விஷ்ணு கடவுளுடைய தசா அவதாரங்களில் மேலும் ஒன்றெனக் கருதப் படுகின்றது. பாலகிருஷ்ணர் மிகவும் செல்லப்பிள்ளையாக உள்ளதுடன் வெண்ணையுண்பதிலும் பிரியங்காட்டுவரென்பது பிரசித்தமானது. இச்சிற்ப முறையில் வெண்ணையுருண்டை ஒன்றைக் கையிலே கொண்டு சந்தோசத்துடன் ஆடுவதாக நிரூபணமாகின்றது.[26] கொடக்கும்பரேயின் கருத்தின்படி இந்தச் சிலைகளனைத்தும் கி.பி.993–1070இற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது.[27] அதாவது கி.பி.10ஆம் 13ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தை அச்சிற்பம் சேர்ந்தது எனக் கருதலாம்.

பொலநறுவையிற் கண்டெடுக்கப்பட்ட இந்த மாதிரி இன்னுமொரு உலோகத்தாலான உருவம் கொழும்பு அரும்பொருளகத்திலும் (இல:13:107:287) காணப்படுகின்றது. அதன் உயரம் 53.7cm கொண்டதாகக் காணப்படுகின்றது. இது இடது காலை உயர்த்தி நிற்பதாக அமைந்துள்ளது. வலதுகை உடைந்த நிலையில் காணப்படுகின்றது. தலையிலே உள்ள கேசபந்த அமைப்பு சற்று உயரமானதாகவும் காணப்படுகின்றது. காதுகளிலே பத்திர குண்டலம் காணப்படுகின்றது. கைகளில் "கேயூரமும்",

தோள் வளையும், வளையல்களும் ஆபரணமாக உள்ளன. இடுப்பிலே மேகலாபரணம் உள்ளது. ஆனாலும் உருவம் நிர்வாண மூர்த்தியாகஇருக் கின்றது. இருகால்களிலும் பாதசரமும், சிலம்பும் காணப்படுகின்றன. இந்த உருவம் பொல நறுவை 1ஆம் இலக்கச் சிவாலயத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டதாக ஆனந்த குமாரசுவாமி குறிப்பிட்டுள்ளார்.[28] ஆனாலும் பெல் அவர்களு டைய பட்டியலின்படி இச்சிற்பம் 1ஆம் இலக்கச் சிவாலயத்தில் கண்டெடுக்கப்பட்டதாக இல்லை. ஆனால் 5ஆம் இலக்கச் சிவாலயத்தின் பொருட் களிடையே 3ஆம் பகுதியில் ஆண் உருவமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[29] அருணாசலம்அதை 3ஆம் பிரிவில் ஓர் உருவமாகக் குறிப்பிட்டிருக் கின்றார்.[30] இதன்படி 5ஆம் இலக்கச் சிவால யத்திலிருந்து கிடைத்த உருவமொன்றாகத் தான் இதனை ஏற்றுக்கொள்ள முடியும். (ஆனந்த குமாரசுவாமி உலோகச் சிலைகள் விபரங்களைக் காட்டும்போது பல வேளை களிலும், பெல்லினுடைய அறிக்கைக்கு வித்தி யாசமாகவே தருவதனைக் காணலாம்.) இவற் றைக் கண்டுபிடித்த தொல்லியலாளரான பெல் அவர்களின் அறிக்கையின்படிதான் குமார சுவாமி அந்த விபரங்களைப் பெற்றுக்கொண் டார் என்பதும் கவனிக்க வேண்டியதாகும். அதன்படி இந்தச் சிலை கிருஷ்ணர் என நிரூ பணமாகின்றது.[31] அவர்கள் அவ்வாறு கருதி யதற்குக் காரணம் அந்த இடத்தில் கிடைத்த உருவங்களனைத்தும் வைஷ்ணவ உருவ வணக் கத்திற்கு சம்பந்தப்பட்டவையாக இருந்த தனாற்தான். ஆனாலும், அந்த இடத்தில், பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட உலோகச் சிற் பங்களிடையே விஷ்ணு உருவங்களும், இதன் முன்பு விபரிக்கப்பட்ட பாலகிருஷ்ண உருவமும் இருந்ததென்பது குறிப்பிடத்தக்க காரணம் ஆகும். அதனால் இச்சிலையும் பாலகிருஷ்ண உருவம்தான் எனக்கருதுவது ஏற்புடையது. சம்பிரதாய இலச்சினைகளின் பிரகாரம் இது கி.பி.12ஆம், 14ஆம் நூற்றாண்டிற்கு இடைப் பட்ட காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம்.

கொழும்பு தேசிய அரும்பொருளகத்தில் (இல:13,171,295) காணப்படும் 8.3cm உயர முள்ள சிறிய உலோகத்தாலான உருவம் குருநாகலில் இருந்து கிடைத்தது. அதில் தவழ்ந்து கொண்டிருக்கும் சிறு குழந்தை வடிவம் காட்டப்படுகின்றது. அவ்வுருவத்தில் உயர்ந் திருக்கும் வலது கையில் எதையோ வைத்திருக் கின்ற மாதிரிக் காணப்படுகின்றது. தலையில் ஆபரணங்களெதுவும் இல்லை. காதுகளில் பத்திர குண்டலம் ஒரு சோடி இருக்கின்றது. கழுத்திலே மாலையும், கையிலே வளையல் களும், கால்களில் சிலம்புகளும் காணப்படு கின்றன. இந்தச் சிற்பத்தின் வலது கரத்தில் வெண்ணையுருண்டை ஒன்றிருப்பதாகக் கருதமுடியும். இந்த உருவம் பாலகிருஷ்ணரைக் குறிப்பதாக ஆனந்தகுமாரசுவாமி உறுதிப் படுத்தி இருக்கின்றார்.[32] மிகவும் சிதைந்து போயிருந்தும், அதன் இயற்கை அழகுத் தோற்றத்தின்படி கி.பி.11ஆம் – 12ஆம் நூற்றாண்டுகளில் அப்படிமம் அமைக்கப்பட்ட தொன்றாகக் கருதமுடியும்.

**கந்தரோடையிற் கிடைத்த பாலகிருஷ்ணர் செப்புப் படிமம்**

இலங்கையில் இதுவரையில் கிடைத்த வற்றுள் கந்தரோடையில் கிடைத்த தவழும் நிலையில் அமைந்த பாலகிருஷ்ணர் செப்புப் படிமம் தனித்துவமுடையதாகும். கந்தரோடை யிலுள்ள கற்பொக்கணை என்ற குறிச்சியில் குழி அகழ்வின்போது தற்செயலாகக் கிடைத்த இச் செப்புப் படிமமானது கவரத்தக்க கலை